# தமிழ் வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண். 46

## அறிவிப்புகள்
## 2017 – 2018


## சேவூர் சோ. இராமச்சந்திரன்

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்,

தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை

## அறிவிப்புகள்

**1. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் 2 ஆயிரத்திலிருந்து ரூபாய் 2 ஆயிரத்து 500 ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்பொழுது, திங்கள்தோறும் ரூபாய் 2 ஆயிரத்துடன் மருத்துவப்படி ரூபாய் 100/– வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூபாய் 2000/–த்திலிருந்து ரூபாய் 2500/–ஆக உயர்த்தி வழங்கப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 24 இலட்சத்து 24 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.**

**2. புலம்பெயர் வாழ் தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ்ப்பல்கலைக்கழகம் வாயிலாக இசை மற்றும் நாட்டியப் பயிற்சி அளிக்க ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களின் பாரம்பரியமிக்க கலைகளான இசை மற்றும் நடனத்தைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுத் தருவதில் ஆர்வமும் முனைப்பும் கொண்டுள்ளதைக் கருத்திற் கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றை உருவாக்கி, அதன்வழி தமிழர்கள் வாழும் நாடுகளில் கல்வி மற்றும் கலை பயிற்று நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு அங்குள்ள மையங்களில் இசை மற்றும் நடனப் பயிற்சி அளித்துப் பட்டயச் சான்றிதழ் வழங்கப்படும். **இத்திட்டத்திற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உயராய்வுத் திட்டங்களுக்கான களப் பணிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய நான்கு புலங்களின் கல்விப் பணியாளர்கள் மேற்கொள்ளும் களப்பணி, போக்குவரத்து, நூல்கள் வாங்குதல், சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கணினியில் உள்ளீடு செய்தல் ஆகியவற்றிற்குப் **புலம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் நான்கு புலங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக வழங்கப்படும்.**

**4. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவ / மாணவியர் விடுதிகள் உள்கட்டமைப்பு மற்றும் உணவு சமைக்கும் பாத்திரங்கள் வாங்கிட ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் கட்டப்பட்டு வரும் மகளிர் விடுதிக்கும், ஆடவர் விடுதிக்கும் தேவையான இரும்புக் கட்டில், மேசைகள் மற்றும் நாற்காலிகள் வாங்குவதற்கும், மாணவர்களுக்கு உணவு தயாரிப்பதற்கான இரும்பு அடுப்புகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கும் **ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.**

**5. உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகக் கட்டடப் பராமரிப்புப் பணிக்கென ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் கலையரங்கம், இரண்டு கூட்ட அரங்குகள், நிருவாகப்பிரிவு, ஆய்வுப்பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, நிருவாகக்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்ட அரங்கம், விருந்தினர் தங்கும் அறைகள் உள்ளிட்டவற்றை பராமரிப்பதற்கெனவும் அமைக்கப்படவுள்ள தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய அருங்காட்சியகத்தைப் பராமரிக்கவும் ஆண்டுதோறும் **தொடர் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**6. தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்குக் கணினி வாங்கிட ரூபாய் 9 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள பழைய கணினிகளுக்குப் பதிலாகப் புதியதாக **16 கணினிகள் மற்றும் அச்சுக் கருவிகள் வாங்கிட ரூபாய் 9 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்திற்கு ரூபாய் 9 இலட்சம் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்மொழியின் உயராய்வுக்கெனத் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் தமிழ் முனைவர் பட்ட மாணவர்கள் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று, தம் முனைவர் பட்ட ஆய்வின் ஒரு பகுதியை மேற்கொள்ளவும் தமிழ் ஆராய்ச்சியை மேற்கொண்டுவரும் வெளிநாட்டு மாணவர்கள் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை தந்து ஆய்வு செய்திடவும் “தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத் திட்டம்” செயல்படுத்தப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 9 இலட்சம் ஆண்டுதோறும் வழங்கப்படும்.**

## 8. ஆட்சிமொழிப் பயிலரங்கம் நடத்திட ரூபாய் 6 இலட்சத்து 40 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் குறித்து இரண்டு நாள் பயிலரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ஆண்டுக்கு ரூபாய் 30,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. இத்தொகை ரூபாய் 50,000/–ஆக உயர்த்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு **ரூபாய் 6 இலட்சத்து 40 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.**

**9. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் குளிர் வசதி ஏற்படுத்தும் வகையில் சீர்வளிக் கருவிகள் வாங்கிட ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள அண்ணா கருத்தரங்கக் கூடம், திருக்குறள் காட்சிக் கூடம், மொழிப் பயிற்சிக் கூடம் ஆகியவற்றில் குளிர் வசதி ஏற்படுத்திட **12 சீர்வளிக் கருவிகள் வாங்குவதற்கு ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும்.**

## 10. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிற்சிப் பட்டறைகள் நடத்த ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள மொழிப் பயிற்சிக் கூடம் வழியாகக் கற்றல்/கற்பித்தல் தொடர்பான பயிற்சி அளிக்கவும், அயல்நாடுகளிலிருந்து வந்து பயிலும் மாணவர்களுக்குத் துறைசார் வல்லுநர்களைக் கொண்டு செயல் வடிவில் பயிற்சி அளிப்பதற்கும் மற்றும் திருக்குறள் காட்சிக்கூடத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் திருக்குறள் தொடர்பான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, திருக்குறள் ஒப்பித்தல் மற்றும் திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்துவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும். **இதற்கென, இந்நிறுவனத்தில் செயல்பட்டுவரும் நான்கு புலங்களுக்கும் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.**

**11. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்யும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகையாக ஆண்டுதோறும் ரூபாய் 4 இலட்சத்து 80 ஆயிரம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் மாணவர்களுள் தெரிவு செய்யப்பட்ட 8 பேருக்கு வரையறுக்கப்பட்ட காலம் வரை திங்கள்தோறும் ஆய்வுக்கான நிதியுதவியாக ரூபாய் 5,000/– வீதம் வழங்கப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 4 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**12. குவகாத்திப் பல்கலைக்கழகத்தில் தமிழ் நூலகம் அமைத்தல் மற்றும் கணினி வாங்கிட ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக குவகாத்திப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிலும் மாணவர்கள் தமிழ் இலக்கியங்களை அறிந்திடும் நோக்கில் தமிழ் நூலகம் அமைக்க ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரமும் மற்றும் வடகிழக்கு இந்தியாவிலிருந்து குவகாத்திப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியப் படைப்புகளை இணைய வழியில் கற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக 5 கணினிகள் வாங்கிட ரூபாய் 3 இலட்சமும் என மொத்தம் **ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்திற்குக் கண்காணிப்புப் படக் கருவி அமைக்க ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்திலுள்ள புதிய நிருவாகக் கட்டடம், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம், அரிய பல நூல்களைக் கொண்ட நூலகம், ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் ஆகிய இடங்களைக் கண்காணித்துப் பாதுகாக்கும் வகையில், முதன்மையான இடங்களில் கண்காணிப்புப்படக் கருவி பொருத்தப்படும். **இதற்கென ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**14. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடிப் பட்டய மாணவர்களுக்கு நிதியுதவியாக ஆண்டுதோறும் ரூபாய் 3 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பழங்கால அரிய ஓலைச் சுவடிகளைப் படிக்கவும் பதிப்பிக்கவும் தெரிந்தவர்கள் தமிழகத்தில் மிகக்குறைந்த அளவே உள்ளனர். அருகி வரும் இக்கலையினை அழிவிலிருந்து பாதுகாத்திட, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டுவரும் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் பயின்றுவரும் மாணவர்களை ஊக்கப்படுத்திடும் வண்ணம் தேர்வின் அடிப்படையில் 10 மாணவர்களுக்கு ரூபாய் 3,000/– வீதம் திங்கள்தோறும் ஆய்வு உதவித் தொகை வழங்கப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 3 இலட்சத்து 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**15. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்வி, நிருவாக அலுவலர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் பயன்பாட்டிற்குக் கணினிகள் வாங்கிட ரூபாய் 3 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரியும் கல்வி மற்றும் நிருவாகப் பணியாளர்களின் பயன்பாட்டிற்கும் ஆய்வு மாணவர்களின் பொதுப் பயன்பாட்டிற்குமென மொத்தம் **6 கணினிகள், துணைப் பொருட்கள், அச்சுப் பொறியுடன் கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 3 இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்படும்.**

**16. கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான சில்லறைச் செலவினத் தொகையினை உயர்த்தி ரூபாய் 3 இலட்சத்து 20 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் கவிதை புனையும் திறனையும் வளர்க்கும் நோக்கில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 2003–2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இப்போட்டிகளை மாவட்ட அளவில் நடத்திட வழங்கப்படும் சில்லறைச் செலவினத் தொகை ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 20,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். **இதற்கென ஆண்டுக்கு தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 20 ஆயிரம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 17. உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாகத் தமிழாசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அளித்திட ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் இலக்கண, இலக்கியத்தில் சிறந்து விளங்கும் பேராசிரியர்களையும் வல்லுநர்களையும் கொண்டு தமிழாசிரியர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும். ஓராண்டில் 32 மாவட்டங்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி நடத்திடும் வகையில் **திங்களொன்றுக்கு ரூபாய் 15,000/– வீதம் மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**18. உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் நூல்களை அரங்கேற்றம் செய்திட ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழில் சிறந்த படைப்புகளைப் படைக்கும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் திங்கள்தோறும் அரங்கேற்றம் செய்யப்படும். இதற்கென ஏற்படும் அரங்கேற்றச் செலவினங்களுக்கு **திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் ஆண்டிற்கு ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரம் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.**

**19. சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்ய ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்க் கவிஞர்கள் நாளாகக் கொண்டாடப்படும் ஏப்ரல் 29ஆம் நாளன்று, தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்ட ஒக்கூர் மாசாத்தியார், நல்லூர் நத்தத்தனார், மாங்குடி மருதனார், கருவூர் புலவர்கள் பன்னிருவர் ஆகிய சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு மாலை அணிவித்து மலர்தூவிச் சிறப்பு செய்யப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**20. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உலக மரபு நாள், மொழிபெயர்ப்பு நாள், நூலக நாள், நிறுவன நாள் கொண்டாட ரூபாய் 1 இலட்சம் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பழந்தமிழரின் பெருமைகளைப் போற்றிடும் வகையில் **மரபு நாளையும்,** இளைய தலைமுறையினருக்கு வாசித்தல், பதிப்பித்தல் குறித்த விழிப்புணர்வினை ஊட்டும் வகையில் **நூலக நாளினையும்,** மொழிபெயர்ப்புக் கலையின் அவசியத்தை உணர்த்தும் வகையில் **மொழிபெயர்ப்பு நாளினையும்,** உயர் தமிழாய்வினை முன்னெடுத்துச் செல்லும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் **நிறுவன நாளினையும்** கொண்டாடும் வகையில் **நான்கு விழாக்களுக்கு ரூபாய் 1 இலட்சம் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.**

**21. காவியப் புலவர்களான கம்பர் மற்றும் இளங்கோவடிகளின் சிலைகளுக்குச் சிறப்புச் செய்ய ரூபாய் 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள **கம்பர்** மற்றும் **இளங்கோவடிகள்** ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து, சிறப்புச் செய்யப்படும். **இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**22. உதவித்தொகை பெற்று வரும் தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்கள் இயற்கை எய்திய நாளுக்கு மறுநாள் முதல் அவர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்களின் மறைவுக்குப் பின்னர் அவர்களது மரபுரிமையர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்களின் மறைவுக்குப் பின் அவர்களது மரபுரிமையர்களுக்குத் தற்பொழுது அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் வழங்கப்பட்டு வருகிறது. மரபுரிமையர்களின் நலனைக் கருத்திற்கொண்டு **தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்கள் இயற்கை எய்திய நாளுக்கு மறுநாள் முதல் அவர்களின் மரபுரிமையர்களுக்கு** உதவித்தொகை **வழங்கப்படும்.**

**23. சிறந்த நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், தற்பொழுது வழங்கப்படும் நூல் மதிப்பீட்டுத் தொகையில் 60% விழுக்காடு என்பதை 100% விழுக்காடாக உயர்த்தி, உச்ச வரம்புத் தொகையாக ரூபாய் 50,000/– வரை வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகச் சிறந்த நூல் வெளியிட நிதியுதவித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் விதிகளைத் தளர்த்தி எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மதிப்பீட்டுத் தொகையில் 60 விழுக்காடு என்பதை நீக்கம் செய்து எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 50,000/–க்குள் இருப்பின் அத்தொகை முழுமையாக வழங்கப்படும். மேலும், நூலாசிரியரின் ஆண்டு வருவாய் மற்றும் வயதைக் கணக்கில் கொள்ளாமல் நிதியுதவி வழங்கப்படும்.

**24. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற ஆண்டு வருவாய் வரம்பு ரூபாய் 36,000/–த்திலிருந்து ரூபாய் 72,000/–ஆக உயர்த்தப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அகவை முதிர்ந்த தமிழறிஞர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, உதவித்தொகை பெறத் தற்பொழுதுள்ள ஆண்டு வருவாய் வரம்பு **இவ்வாண்டு முதல் ரூபாய் 36,000/–லிருந்து ரூபாய் 72,000/–ஆக உயர்த்தப்படுகிறது.**

## 25. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர் சேர்க்கை அறிமுகப்படுத்தப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் அயலகத் தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்று வருகிறார்கள். அவ்வாறு பங்கேற்பவர்களை ஒருங்கிணைக்கும் முகமாக **உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர் சேர்க்கை அறிமுகப்படுத்தப்படுகிறது.**

**சேவூர் சோ. இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்